# முள்ளம்பன்றி



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# முள்ளம்பன்றி

உலகத்தமிழ்க் கழகம்

www.worldtamilacademy.com

முட்களையுடைய பன்றி போன்ற தோற்றம் கொண்ட விலங்கினை முள்ளம்பன்றி என்று கூறுவர். ஆனால் முள்ளம்பன்றிகள் (Porcupine) பன்றி இனத்தைச் சேர்ந்தவை அல்ல. முள்ளம்பன்றிகள் அண்டார்டிகா கண்டத்தைத் தவிர பிற கண்டங்களில் காணப்படுகின்றன. அவை கொறியுண்ணிகள் (Rodents) அதாவது எலி, அணில் போன்றவைகளைப் போன்று கொறித்து உண்ணும் விலங்கு குடும்பத்தைச் சேர்ந்தவை.

## கொறியுண்ணிகள் :









**வளர்ந்த முள்ளம்பன்றிகள்  50 செ.மீ உயரமும் 4.5 முதல் 13 கிலோ எடையும் கொண்டது.**




**முள்ளம்பன்றிகள் இரவாடிகள். அதாவது இரவு நேரத்தில் இயங்கும் தன்மையுடையது.**



**முள்ளம்பன்றிகள் மரங்களில் வாழும். பாதுகாப்பிற்காக பாறைப் பிளவுகள், குகைகள், மரத்தின் அடியிலும்  வாழும்.**





**முள்ளம்பன்றிகள் பழுப்பு, சாம்பல் மற்றும் வெள்ளை நிறத்தில் காணப்படும்.**







**முள்ளம்பன்றிகளின் முதுகு, வால் பகுதியில் ஊசி போன்ற கூர்மையான முட்கள் காணப்படுகின்றன. அவை குயில்கள் (quills) என்று அழைக்கப்படுகின்றன. ஒரு முள்ளம்பன்றியின் உடலில் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட முட்கள் காணப்படுகின்றன.**



**முள்ளம்பன்றியின் முட்கள் இனத்திற்கு ஏற்ப வேறுபடும். அது கெரட்டின் (Keratin) என்னும் வேதிப்பொருளாலானது.**




முள்ளம்பன்றியின் முட்கள் விழுந்தாலும் மீண்டும் முளைக்கும் தன்மையுடையது. முள்ளம்பன்றிகள் முட்களைச் செலுத்துவதில்லை அவை தொட்டவுடன் ஒட்டிக்கொண்டு கடுமையான காயத்தை ஏற்படுத்தும். இறப்பு கூட நேரலாம். தன்னைத் தாக்க வரும் எதிர் உயிரினங்களிடமிருந்து பாதுகாக்கும் கவசமாக முட்கள் செயல்படுகின்றன.



**பூக்கள், வேர்கள், மரப்பட்டைகள், இலைகள், பழங்கள் போன்றவற்றை உண்ணும். சில இனங்கள் இறந்த உயிரினங்களையும் உண்ணுகின்றன.**





**முள்ளம்பன்றிகள் ஒரு நேரத்தில் ஒரு குட்டி மட்டுமே ஈனும்.**



**ஓநாய், மலைச்சிங்கம், குறுவால் பூனை (Bobcats), சில ஆந்தை  இனங்கள் போன்றவை முள்ளம்பன்றிகளை வேட்டையாடுகின்றன. முள்ளம்பன்றி 5 அல்லது 7 ஆண்டுகள் வரை வாழும்.**





உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com